நிகழ்நிலை (Online)

# தேசிய கல்வி நிறுவகம், மகரகம

# கல்வி ஆராய்ச்சி முறையியல் டிப்ளோமா பாடநெறி

## Diploma in Educational Research Methodology - 2026

## SLQF Level - III

தேசிய கல்வி நிறுவகத்தின் ஆராய்ச்சி, அபிவிருத்தித் துறையினால் முன்னெடுக்கப்படும் மேற்படி பாடநெறிக்கான விண்ணப்பப்படிவம் கோரப்பட்டுள்ளது.

**01. பாடநெறியின் தன்மை:**

- கல்வி ஆராய்ச்சி பற்றிய டிப்ளோமா கற்கை நெறி, முப்பது (30) கிரடிற்றுக்கள் கொண்ட ஓராண்டுக்குரிய பகுதிநேர, வார இறுதிக் கற்கை நெறியாகும்.
- கலவை (Blended) முறையில், 40% அமர்வுகள் நேர்முக அமர்வுகளாகவும், 60% அமர்வுகள் நிகழ்நிலையிலும் (Online) நடத்தப்படும். இக் கற்கைநெறி இரண்டு கற்கைத் தவணைகளைக் கொண்டதாகும்.
- தமிழ், சிங்களம் ஆகிய இரண்டு மொழிகளிலும் கற்கைநெறி நடத்தப்படும்.

**02. விண்ணப்பத் தகைமை:**

- அரச/ அரச சார்ந்த / தனியார் கல்வி நிறுவனமொன்றில் (பாடசாலைகள், பிரிவெனாக்கள், சர்வதேச பாடசாலைகள்) அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றின் அதிபராக அல்லது ஆசிரியராக இருத்தல்.
- SLEAS, SLTES, ஆசிரியராக / சிரேஷ்ட ஆசிரிய ஆலோசகராக ISA இருத்தல்.
- தேசிய கல்வி நிறுவக கல்விசார் பணியணி உறுப்பினராக இருத்தல் அல்லது,
- தேசிய கல்விக் கல்லூரி கல்விசார் பணியணி உறுப்பினராக இருத்தல் அல்லது,
- கல்வி ஆராய்ச்சியில் ஆர்வம் காட்டும் கல்வி சார்ந்த ஒருவராக இருத்தல்

அத்தோடு

- கல்விப் பொதுத் தராதரப்பத்திர உயர்தரப் பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

**03. பாடநெறிக்கான தெரிவுமுறை:**

நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படும்.

**04. கட்டணம்:**

| | | |
|---|---|---|
| விண்ணப்பக் கட்டணம் | : | 500 ரூபாய் |
| பதிவுக் கட்டணம் | : | 2000 ரூபாய் |
| பாடநெறிக் கட்டணம் | : | 50,000 ரூபாய் (சமனான இரு தொகைகளாக இரண்டு தவணைகளில் செலுத்த முடியும்) |

**05. பாடநெறி நடைபெறும் இடம்: தேசிய கல்வி நிறுவகம், மகரகம.**

**06. விண்ணப்பிக்கும் முறை:**

- தேசிய கல்வி நிறுவகத்தின் இணையத்தளத்தினுள் பிரவேசித்து, பரீட்சைகள் துறையின் வலைப்பக்கத்தில் விண்ணப்படிவம் தொடர்பான தகவல்களைப் பெற்றுகொள்ள முடியும். https://www.exams.nie.lk/intakes/new

- https://www.exams.nie.lk/intakes/new வலைப்பக்கத்தினுள் பிரவேசித்து (sign up) உரிய தகவல்களைப் பூரணப்படுத்துக. அங்கு உமகக் வழங்கப்படும் பயனாளி இலக்கத்தைப் (user ID) பதிவிடுங்கள். மேலதிகத் தொடரபுகளுக்காக உங்களது கடவுச் சொல்லைக் (Password) குறித்து வைத்துக் கொள்ளுங்கள்.
- வலைத்தளத்தின் வலப்பக்கத்தில் மேல் உள்ள இரு கூண்டுகளில் உங்களது பயனாளர் இலக்கம் மற்றும் கடவுச் சொல்லைப் பதிவிட்டு csE; iof (Log in).
- உங்களின் சுய விபரங்களை (User Profile ) இற்றைப் டுத்தி (Update) பதிவிடுங்கள்.
  - o தனிப்பட்ட விபரங்கள்
  - o சேவை பற்றிய தகவல்கள்
  - o கல்வி மற்றும் தொழிற்தகைமைகள்

- அடுத்து புதிய தகவல் பக்கத்தினுள் (New Enrollment) நுழையுங்கள்.
- அடுத்து குறிதத் பாடநெறிக்குரிய விணண்ப்பப் பகுதிக்குள் (My Application) நுழையுங்கள்.
- விண்ணப்பப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் சரியானதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.
- இலக்கம் 6 இல் குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிக்கான உரிய மொழி மூலத்தை தெரிவு செய்யுங்கள்.
- படிமுறை 2 இனுள் (STEP 2 Payment) பிரவேசியுங்கள். இங்கு நீங்கள் இலங்கை வங்கிக் கிளை ஒன்றில், தரப்பட்டுள்ள கணக்கு இலக்கத்துக்கு 500/= ரூபாவை விண்ணப்பக் கட்டணமாகச் செலுத்தியதுக்கான ஆதார எண்ணைப் பதிவிடுங்கள். (Payment Reference Number)
- கட்டணம் செலுத்தியதற்கான பற்றுச் சீட்டினை ஊடுகதிர; (Scan) செய்து, அதன் திகதி மற்றும் பற்றுச்சீட்டு இலக்கம் (Transaction Reference Number) ஆகியவற்றை உரிய இடத்தில் பதிவிடுங்கள்.
- இதன்போது உங்களுக்குக் கிடைக்கும் விண்ணபப் மீளாய்வு இலக்கத்தினைக் (Application Reference Number) குறித்து வைத்துக் கொள்ளுங்கள்.

- இது தொடர்பான மேலதிகத் தகவல்களுக்காக 0117601863, 0117601790, 011769794 என்ற தொலைபேசி இலக்கத்தை வாரநாட்களில் (மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 4.00 மணி வரை) அழையுங்கள். விண்ணப்பப்பத்திரத்தை முன்வைத்தல் தொடர்பான தொழினுட்பப் பிரச்சினைகள் தொடர்பில் தொலைபேசி **(0117601776/ 0117601777)** இலக்கத்தினைத் தொடர்பு கொள்ளவும்.

**07. விண்ணப்ப இறுதித் திகதி** 2026.07.31

பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம.